# 4.6 தேவனுடைய வார்த்தையால் வாழுங்கள்

**வேத வசனம்:** என் வார்த்தைகளைக் கேட்டும் அவைகளின்படி செய்யாதவனோ அஸ்திபாரமில்லாமல் மண்ணின்மேல் வீடுகட்டினவனுக்கு ஒப்பாயிருக்கிறான். நீரோட்டம் அதின்மேல் மோதினவுடனே அது விழுந்தது. விழுந்து முழுவதும் அழிந்தது என்றார். லூக்கா 6:49

**அறிக்கை:** தேவனுடைய வார்த்தையைக் கேட்டு அதற்குக் கீழ்ப்படிந்து தேவனுக்குப் பிரியமாயிருப்போம்

**சத்தியம்:** என் கற்பனைகளைப் பெற்றுக்கொண்டு அவைகளைக் கைக்கொள்ளுகிறவனே என்னிடத்தில் அன்பாயிருக்கிறான். என்னிடத்தில் அன்பாயிருக்கிறவன் என் பிதாவுக்கு அன்பாயிருப்பான். நானும் அவனில் அன்பாயிருந்து அவனுக்கு என்னை வெளிப்படுத்துவேன் என்று கர்த்தராகிய இயேசு சொன்னார்.

## பாடக்குறிப்புகள்

- **தேவனுடைய வார்த்தையில் ஜீவனும் வல்லமையும் இருக்கிறது** - *எபி. 4:12, யோவான் 1:3, 6:63*
- **தேவனுடைய வார்த்தை வாழ்க்கையை மாற்றக்கூடியது** - *எபி. 8:10-11, சங். 19:7, நீதி 2:6*
- **தேவனுடைய வாக்குத்தத்தங்கள் எப்போதும் நிலைத்திருக்கும்** - *மாற்கு 13:31*
- **தமது வார்த்தையின்படி செய்கிறவர்களிடத்தில் தேவன் பிரியமாயிருக்கிறார்** - *யோவான் 14:21*

## வேதப்பகுதி

*நீதிமொழிகள் 2:1-6*

## ஆர்வமூட்டும் வினாக்கள்

(ஒன்று அல்லது அதற்கு மேற்பட்ட கேள்விகளை விவாதிக்கலாம்)

- பெரியவர்கள் சொல்வதைச்செய்ய எப்போது கடினமாக இருக்கும்?
- வேதத்தின் எந்த வார்த்தைக்குக் கீழ்ப்படிவது கடினம்?
- தேவனுடைய வார்த்தை இன்றும் வல்லமையுள்ளதாயிருப்பது எப்படி? (எபி. 4:12, 8:10-12)

## தேவனுடைய வார்த்தையில் வளருதல்

ஒரு சிறுத்தையால் தன் உடலில் உள்ள புள்ளியை மாற்ற முடியாது. அதேபோல மனிதன் தன்னை மாற்றுவது கடினம். ஆனால் தேவனுடைய வார்த்தை வாழ்க்கையை மாற்றக்கூடியது. தேவன் தம்முடைய வார்த்தையை மனிதர்களின் இதயத்தில் பதிய வைத்து வாழ்வை மாற்றுகிறார். தேவனுடைய வார்த்தையின்படி நாம் நடக்க அதனை நன்றாகக் கற்றுக்கொள்ள வேண்டும். வலது பக்கத்தில் உள்ள படத்தில் தேவனுடைய வார்த்தையிலிருந்து நீங்கள் கற்றுக்கொண்ட சில காரியங்களையும் அதை எப்படி உங்கள் வாழ்க்கையில் நடைமுறைப்படுத்த முடியும் என்பதையும் எழுதுங்கள்.

| தேவனுடைய வார்த்தையிலிருந்து நான் என்ன கற்றுக்கொண்டேன்? | அதனை எப்படி நடைமுறைப்படுத்தப் போகிறேன் |
|---|---|
| | |

**சிந்திக்க:**
தேவனுடைய வார்த்தை உன்னில் செயல்பட என்ன செய்யலாம்?

______________________________

______________________________

**ஜெபம்:**
தேவனுடைய வார்த்தை உங்கள் இருதயத்தில் கிரியைச் செய்யவும் உங்கள் வாழ்க்கையை மாற்றவும் வேண்டி ஒரு ஜெபத்தை எழுதுங்கள்.

______________________________

______________________________

**செயல்**
தேவனுடைய வார்த்தை உங்களில் செயல்பட முடிவெடுங்கள். தினமும் வேதத்தை வாசிக்கத் தீர்மானம் செய்யுங்கள்.